THE MADRAS LEGISLATIVE COUNCIL

Thursday, the 7th March 1968.

The House met in the Council Chamber, Fort St. George, at 3-04 p.m. Mr. Chairman (THE HON. THIRU M. A. MANICKAVELU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

Burma Refugees.

*** 191.** *Q.*—**THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state the nature of help rendered to Bhurma refugees by the Madras Government from 6th March 1967 to 30th September 1967 ?**

பர்மா அகதிகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

6-3-1967 முதல் **30-9-1967** வரை தமிழக அரசு பர்மா அகதிகளுக்கு என்னென்ன உதவிகள் செய்துள்ளது ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : (on behalf of the Hon. the Cheif Minister) : பர்மாவிலிருந்து வந்த அகதிகளின் வாழ்வுச் சீரமைப்பிற்காக **6-3-67**-லிருந்து **30-9-1967** தேதி வரை உள்ள கால அளவில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்த விவர அறிக்கை[a] ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் சொல்லப்பட்ட அந்தக் காலத்திற்குள்ளாக அவர்களுக்கு எவ்வளவு ரூபாய் கொடுக்கப்பட்டது ? எத்தனை பேருக்குக் கொடுக்கப்பட்டது ? எவ்வளவு நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது ? கொடுக்கப்பட்ட மொத்த தொகை என்ன என்ற விவரம் இல்லை. அதைக் கூறவேண்டும்.

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முதியோர் ஊதியம் என்ற வகையில் **94** பேர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. கல்விச் சலுகை **645** பேர்களுக்கு, தகுதியுள்ளவர்களுக்குத் தரப்பட்டது. டிரைவிங் சிறிய வாகனப் பயிற்சி **40** பேருக்குக் கொடுக்கப்பட்டது. பெரிய வாகனம் ஓட்டும் பயிற்சி **3** பேர்களுக்கும், குடியிருப்பு நிலம் **21** குடும்பங்களுக்கும், தனியாகத் தங்கும் வசதியுள்ள பொதுப் பள்ளிகளில் சிறுவர்கள் **429** பேருக்கும், சிறுமியர் **398** பேர்களுக்கும் அளிக்கப்பட்டது. அனாதைப் பெண்கள் **69** பேர்களுக்கும் ஆதரவற்ற குழந்தைகள் **70** பேருக்கும் இதுவரையில் உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. வியாபாரம் செய்வதற்கு கடன் வகையில் ரூ. **17,13,926** கொடுக்கப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, பர்மா பஜார் என்ற பெயரில் ஒரு பஜார் சென்னையில் வைத்து நடத்தப்படுகிறது. அவர்களுக்கு ஸ்திரமாக இருக்கும் வகையில் ஆஸ்பெஸ்டாஸ் போட்டு அல்லது தகரங்களைப் போட்டு கடைகளாகக் கட்டிக் கொடுக்க சர்க்கார் உத்தேசிக்குமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : இப்போது இருக்கிறவர்களையே கிளப்ப முடியாத நிலை அங்கே இருக்கிறது. அவர்களுக்கு ஏதாவது வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும். அது அதே இடத்தில

---

a Printed as Appendix on page 479.

தருவதா அல்லது வேறு இடம் தருவதா என்று யோசனையில் இருக்கிறது. இப்போது உள்ள இடம் போக்குவரத்துக்கு இடையூருக இருக்கிறது. எனவே ஒரு இடம் தேடிக்கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் அக்கறை கொண்டிருக்கிறது. இதை பரிசீலித்து முடிவு எடுக்கலாம்.

திரு. எம். எத்திராஜுலு : பர்மா மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற காரணத்தால், பர்மா அகதிகளுக்குக் கூட்டுறவு முறையில் விவசாயப் பண்ணைகளை அமைத்து விவசாயத்தில் ஈடுபடச் செய்து உற்பத்தியை பெருக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : கூட்டுறவு பண்ணை வைத்து அதன் மூலமாகப் பலன் பெறுவதற்கான விழைவோடு வருவார்களானல், அதற்குத் தக்க ஏற்பாடு செய்யலாம்.

THIRUMATHI S. MANJUBHASHINI : The Hon. Minister said that it is difficult to get them removed from that place. But we find that more new stalls come up every day on either side of the Parry's Corner where roads are used by pedestrians. Would the Hon. Minister explain to us how he proposes to prevent new stalls from coming up when the existing ones are shifted to other places ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : அப்படிப்பட்ட பொது சங்கடம் வருகிறது. அப்படி வருகிறவர்களை எதிர்த்து அவர்கள் அங்கே வராத அளவுக்கு இருக்கிறவர்கள் தடுக்கிருர்கள் என்ற நிகழ்ச்சி நடக்கிறது. அதன் காரணமாக சங்கடம் ஏற்பட்டிருக்கிறதாகக் குறிப்பிட்டார்கள். அதற்கு வழி கண்டுபிடித்து ஒதுப்புறமாக இடம் கண்டுபிடிக்குமாறு கமிஷனர் அவர்களை கேட்கப்பட்டிருக்கிறது. ஒரு இடம் வகுக்கப்பட்டு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எஸ். ராஜமார்த்தாண்டம் : திருச்சியில் பர்மா அகதிகளுக்கு ஒரு காலனி கட்டிக்கொடுக்கப்பட்டது. அதில் பர்மா அகதிகள் இருந்தார்கள். ஆனல் இப்போது அங்கே அகதிகள் இல்லாமல் காலனி பூராவும் காலியாகக் குடிசைகளாக இருக்கின்றன. அவர்கள் என்ன ஆனூர்கள் ? எங்கே போனூர்கள் என்று அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய குறிப்பு இல்லை. தனிக்கேள்வி போட வேண்டும்.

Remuneration for Supervision Work for Teachers.

*** 192.—*Q.*—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :—**

(*a*) whether the teachers of the former District Board High Schools are eligible for remuneration for their supervision work at the S.S.L.C. Public Examination ; and

(*b*) if not, the reasons therefor ?

மாண்புமிகு திரு. இரா: நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Cultivation of Paddy

*** 193. *Q.*—THIRU WILSON APOLLOS (on behalf of Thiru M. SANKARALINGAM PILLAI) : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state**

(*a*) the taluk-wise acreage of single crop paddy cultivation in Kanyakumari district ; and